இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -6

# நேர்மை நெறி

மே’2021

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

(NERMAI NERI)

Rs.10

## கொடுத்தால் பெறலாம் என்பது கொடையை விற்கும் வணிகமே!

ஊழல்
=
சாபம்



PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023

Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.com

website:anticorruptionchennai.com

# இந்தியாவின் கடன் 100 லட்சம் கோடியைத் தாண்டியது !

வே. கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

**பரவிய செய்தி** ரூ.100 லட்சம் கோடியை தாண்டியது மத்திய அரசின் கடன். 2014-ல் 54 லட்சம் கோடி, 2019-ல் 82 லட்சம் கோடி, ஜுன் 2020-ல் 101.3 லட்சம் கோடி..நாட்டின் அனைத்து திட்டங்களுக்கும் நிதிப்பற்றாக்குறை காரணமாக கடன் பெற்று திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். கடந்த சில ஆண்டுகளாக மத்திய, மாநில அரசுகள் மீதான நிலுவை கடன்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதை கவனித்து வருகிறோம். கடந்த ஆண்டு வெளியான தரவுகளின்படி, இந்தியாவின் மொத்த கடன் 82 லட்சம் கோடியாக உயர்ந்து இருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. தற்போது இந்தியாவின் கடன் சுமை 100 லட்சம் கோடியைத் தாண்டி விட்டது.






Ministry of Finance.Department of Economic Affairs. Budget Division.

Special Data Dissemination Standard [SDDS] National Summary Data Page [NSDP]

Central Government Debt [CGD]

| SDDS DATA CATEGORY AND COMPONENT | Unit of Description | Period of Latest Data | Latest Data | Previous Data | Percentage change from previous to latest period |
|---|---|---|---|---|---|
| 1. Public debt (2+3) | ₹ Crore | Apr/20 - Jun/20 | 92,28,712.16 | 86,05,283.75 | 7.2% |
| 2. External debt | ₹ Crore | Apr/20 - Jun/20 | 6,25,055.55 | 5,85,324.65 | 6.8% |
| 3. Internal debt | ₹ Crore | Apr/20 - Jun/20 | 86,03,656.61 | 80,19,959.10 | 7.3% |
| 4. Other liabilities | ₹ Crore | Apr/20 - Jun/20 | 9,06,887.40 | 8,56,980.98 | 5.8% |
| 5. TOTAL DEBT (1+4) | ₹ Crore | Apr/20 - Jun/20 | 1,01,35,599.56 | 94,62,264.73 | 7.1% |
| **Guaranteed debt** | | | | | |
| I. Total guaranteed debt | ₹ Crore | Apr/20 - Jun/20 | 4,58,058.02 | 5,31,240.26 | |
| II. Outstanding guaranteed debt | ₹ Crore | Apr/20 - Jun/20 | 3,48,901.42 | 3,18,958.67 | |

**FISCAL SECTOR**

| FISCAL SECTOR | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| SDDS DATA CATEGORY AND COMPONENT | Foot notes | Unit Description | Date of Latest Observation*** | Data Observations Latest Data* | Data Observations Latest Data-1** | More info Metadata Home |

மத்திய அரசின் நிதி அமைச்சகம் வெளியிட்ட கடன் விவரங்கள் குறித்த தரவுகளின்படி, 2020 மார்ச் வரையில் ரூ.94.6 லட்சம் கோடியாக இருந்த மொத்த கடன் ஏப்ரல்-ஜூன் வரையில் 101 லட்சம் கோடியாக மாறி உள்ளது. பொதுக் கடன் தொகை 92 லட்சம் கோடியாக உயர்ந்து இருக்கிறது. கொரோனா பாதிப்பு தொடங்கிய குறிப்பிட்ட காலத்திற்குள் மட்டும் 7 லட்சம் கோடி கடன் உயர்ந்து இருக்கிறது.

இந்தியா பொருளாதார மந்தநிலையை சந்தித்து வந்த நிலையில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு நாட்டில் உற்பத்தி இல்லாமல் போனது. இதனால் கடன் மட்டுமே பெறும் சூழல் உருவாகியது. 2020-ன் நிதியாண்டின் முதல் காலாண்டில் மட்டும் 7 லட்சம் கோடி கடன் தொகை உருவாகி இருக்கிறது.

இந்தியாவின் கடன் 82 லட்சம் கோடி ! | நான்கரை ஆண்டில் 49 % உயர்வு

கடந்த ஆண்டு வெளியான தரவுகளின்படி, 2014-ம் ஆண்டு வரை ரூ.54,90,763 கோடியாக இருந்த நாட்டின் மொத்த கடன் 2018 செப்டம்பர் வரையில் ரூ.82,03,253 கோடியாக உயர்ந்து இருந்தது. நாட்டின் கடன் சுமை 49% அளவிற்கு அதிகரித்தது. 2014க்கு பிறகு 6 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த கடன் தொகை 46 லட்சம் கோடி அதிகரித்து இருக்கிறது.

---

**<u>நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்</u>**

## ஏன் வீண் செலவு?

ஒரு சமயம் முக்கியமான காங்கிரஸ் தொண்டர் ஒருவர் கல்யாணப் பத்திரிக்கையுடன் காமராஜரைப் பார்க்க வந்திருந்தார். அப்போது காமராஜர் தமிழக முதல்வராய் இருந்தார்.

காங்கிரஸ் தொண்டர் காமராஜரிடம், “எங்கள் இல்லத் திருமணத்திற்கு அவசியம் வருகை தர வேண்டும். தாங்கள் தான் தலைமை தாங்கி நடத்தித்தர வேண்டும்” என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார். அதற்குக் காமராஜர், “என்னால் வர முடியாது!” என்று கூறி மறுத்து விட்டார். காங்கிரஸ் தொன்டர் அதற்கு மேல் வற்புறுத்த முடியாமல் வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்.

திருமன நாள் வந்தது. காமராஜர் சரியான நேரத்தில் அந்தத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதித்தார். அந்த காங்கிரஸ் தொண்டருக்கும் மற்றவர்களுக்கும் அவரது வரவு இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

திருமண நிகழ்ச்சி முடிந்ததும் அவர் காங்கிரஸ் தொண்டரைச் சந்தித்து “அன்று நீங்கள் எனக்கு கல்யாணப் பத்திரிக்கை கொடுத்தபோதே கல்யாணத்திற்கு செல்ல வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன். நான் வருகிறேன் என்று சொன்னால் என்னை வரவேற்க தடபுடலாக ஏற்பாடு செய்து விடுவீர்கள். மேசை, நாற்காலி, பந்தல், அலங்காரம் வரவேற்பு என்று ஏகத்துக்கும் செலவாகிவிடும். இதையெல்லாம் தவிர்த்து செலவைக் குறைக்கவே, நான் வர மாட்டேன் என்று சொன்னேன்” என்றார்.

**அவரது எளிமையும் தன்னடக்கமான வாழ்க்கை முறையும் அங்கிருந்த அனைவரையும் வியக்க வைத்தன.**

## மருத்துவத்திற்காக மக்களா? மக்களுக்காக மருத்துவமா..?-

மருத்துவத்தால் மனிதன் பிழைத்தான் என்பது அந்தக் காலம்! மனிதனை அழித்து மருத்துவம் பிழைக்கின்றது என்பது நிகழ்காலம்! சில தனியார் மருத்துவமனைகள் தருவது சிகிச்சையா..? சித்திரவதைகளா? தீவட்டி கொள்ளையனைவிட தீய கொள்ளையர்களாக தனியார் மருத்துவமனைகள் சில மாறி வருகின்றன..! கொரொனா கால மருத்துவ கொள்ளைகள் வரைமுறையின்றி செல்கின்றன! நவீன ஆங்கில மருத்துவத்தின் மீதல்ல, மக்கள் கோபம்! அதை கையாளுகின்ற சில மருத்துவர்களின் அணுகுமுறைகளில் தான் உள்ளன!

ஒரே ஒரு எளிய மருந்தில் குணப்படுத்திவிட முடிந்த நோய்களுக்கு கூட நான்கைந்து மருந்துகளை எழுதித் தரும் டாக்டர்கள் மீது தான் மக்களுக்கு நவீன மருத்துவத்தின் மீதே அதிருப்தி ஏற்படுகிறது.

கோடிக்கணக்கில் முதலீடு செய்து, மருத்துவமனைகளைக் கட்டி, நவீன மருத்துவ உபகரணங்களை வாங்கி போட்டுவிட்டதினாலேயே சிகிச்சைக்கு வருபவர்களை எல்லாம் சித்திரவதைக்கு ஆளாக்குவதா..? தற்போது தங்கள் ஒட்டுமொத்த சொத்தையும் விற்று, அது போதாது என்று கடனையும் வாங்கி மருத்துவமனைகளுக்கு கொட்டி அழக்கூடிய குடும்பங்களை பார்க்கும் போது ரத்தக் கண்ணீர் வருகிறது.

இதனால் தான் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி தரக் கூடாது என்று அந்த காலத்தில் இருந்து போராடி வருகிறோம்.பணம் கொடுத்து படித்தவன், பணம் பறிக்கும் அதிகாரம் தனக்கு உள்ளதாக நம்புகிறான்!

சாதாரண காய்ச்சலைப் போலத் தான் மிகப் பெரும்பாலானோருக்கு இன்று கொரானா வந்து செல்கிறது. ஆனால், அதை காம்பிளிகேட்டாக ஆக்கி, லட்சக்கணக்கில் பணம் வாங்குகிறார்களே..! என்ன சிகிச்சை தரப்பட்டது என்பதே தெரியாமல் பிணமாகத் தருகிறார்களே..! வேலை இழந்து, வாழ்வாதாரங்களை இழந்து அனைத்து தரப்பினரும் பொருளாதார நெருக்கடியில் தவிக்கையில், இன்று மருத்துவக் கொள்ளை தீவட்டி கொள்ளைக்காரனை விட மோசமாக நடக்கிறது!

நோய்க்கான மூலத்தை பார்க்காமல் விளைவுகளுக்கு மட்டுமே சிகிச்சை தேடுகிற வழக்கம் தான் தற்போது நடந்து கொண்டுள்ளது! இது மருத்துவத்தை வைத்து பணம் பண்ணுகிறவர்களுக்கு தான் மேன்மேலும் உதவுமே தவிர, மக்களை நோயிலிருந்து ஒரு போதும் விடுவிக்காது! இன்றைக்கு கொரொனாவிற்கு தடுப்பூசி போட்டு முடிந்ததும் நாளை வேறொரு வைரஸ் தாக்கலாம். அதற்கும் தடுப்பூசி கண்டுபிடித்து போடச் சொல்வார்கள்! ஆக, மூலத்தை கண்டடைந்து தவிர்க்காதவரை நோய்களோடு போராடும் வாழ்க்கை தான்!

சுற்றுச் சூழலை நாம் சூறையாடிக் கொண்டே ஆரோக்கியத்தை பேசுவதை போல அறியாமை வேறில்லை! விஞ்ஞானம், அறிவியல் ஆய்வுகள் என்று சொல்லிச் சொல்லித் தான் நமது விவசாயத்தை வில்லங்கமாக்கி விட்டார்கள். ஆண்டு தோறும் பல நூறு லட்சம் டன்கள் கொடிய ரசாயன உரங்களையும், கொடூர விளைவுகளைத் தரும், பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி மருந்துகளையும் பயிர்களுக்கு போடுகிறோம். அதைத் தான் உணவாக நாம் சாப்பிடுகிறோம்! பிறகு ஏன் நமக்கு நோய்கள் வராது..? அப்படி போட்டதினால் நமது நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு இன்று முற்றிலும் மலடாகி உயிர்ப்பிழந்துவிட்டன! பூமியை நாசமாக்கிவிட்டோம்! நாசகாரத் தொழிற்சாலைகள் விடும் நச்சுக் காற்றால் காற்றையும், வானத்தையும் விஷமாக்கிவிட்டோம். ரசாயனக் கழிவுகளை ஆற்றிலும்,

நதிகளிலும் கொட்டித் தண்ணீரைக் கெடுத்துவிட்டோம்! இன்றைக்கு தண்ணீருக்கும் காசு! மூச்சிழுக்கும் ஆக்சிஜனுக்கும் காசு! இயற்கையில் கிடைத்ததை தற்போது பணம் தந்து பெறுகிறோம்!








22.05.202

ESTIMATE

PATIENT NAME : MR. KHAJA HASANUDDIN
AGE/SEX : 41 YEARS /MALE
CONSULTANT : DR. RAJIB PAUL
DIAGNOSIS/TREATMENT : SEVERE COVID-19,ARDS
CATEGORY : ICU/SEMI PRIVAE WARD

| Particulars | | Amount (Rs) |
|---|---|---|
| 1. ACCOMMODATION | | 4,20,000.00 |
| 2. INVESTIGATIONS | | 4,90,000.00 |
| 3. MEDICINES&CONSUMABLES | | 11,50,000.00 |
| 4. EQUIPMENTS | | 1,40,000.00 |
| 5. PROFESSIONAL CHARGES | | 90,000.00 |
| TOTAL | Rs. | 22,90 ,000.00 |

Note: Please note that the above mentioned amount is only estimate figure. This may var[illegible] ...tional Tests, Medicines / Procedures are carried out which will be extra as per the [illegible] extended to patient. All the cheques/Drafts should be drawn in favor of APOLLO HOS[illegible] ...DERABAD. For further correspondence and clarifications contact 040-23607[illegible] ...ING Dept, Ext No. 2006, 4006 and Fax no is 040-2355764

FOR APOLLO HOSPITALS, HYDERABAD

EMERGENCY CALL - 1066
"KEEP THE REPORTS CAREFULLY AND BRING THEM ALONG DURING YOUR NEXT VISIT TO OUR HOSPITAL"

தவிர்க்க வேண்டிய உணவுகளான மைதா, டால்டா, ரீபைண்ட் ஆயில், பாமாயில், வெள்ளைச் சீனி, அஜிணமோட்டோ ஆகியவை இன்று அத்தியாவசிய உணவுகளாக மாறி நிற்கும் அவலத்தை என்னென்பது..?

நமது பாரம்பரிய மருத்துவமுறைகளை ஆராய்ச்சிக்கு உட்படுத்தவில்லை என்பதால் அது தகுதியற்றதாக ஆகிவிடாது. அனுபவத்தில் ஒன்று நமக்கு சரியானதாக இருந்தால் ஏற்றுக் கொண்டு போய்விட வேண்டியது தான்! இன்றைய தினம் ஒரு மருந்து குறித்து ஆராய்ச்சி செய்வதற்கே பல ஆயிரம் கோடி ரூபாய் இருந்தால் தான் சாத்தியம் என்பதை மனதில் வையுங்கள். அதனால் தான் அவ்வாறு செலவு செய்து வரும் மருத்துவத்திற்கு உலக அளவிலான அங்கீகாரம் உறுதிபட தரப்படுகிறது. நம் அனுபவத்தில் அது சரியில்லை என்றாலும் கூட அந்த கார்ப்பரேட்டுகளின் ஆராய்ச்சியில் அது சரியென்றால் நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என நிர்பந்திக்கபடுகிறோம்!

நவீன ஆங்கில மருத்துவத்தில் ஒரு காலகட்டத்தில் ஓகோ என்று சொல்லப்படுபவற்றை யெல்லாம் பிறிதொரு காலத்தில் ஆபத்து உட்கொள்ள வேண்டாம் என்று தடுத்துவிடுகிறார்கள்! மருத்துவத்தால் மனிதன் பிழைத்தான் என்பது அந்தக் காலம்! மனிதனை அழித்து மருத்துவம் பிழைக்கின்றது என்பது நிகழ்காலம்!

- ஹைட்ரோக்சிகுளோரோபிளை முதலில் எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள்! பிறகு வேண்டாம் என்றார்கள்!
- ரெம்டெசிவரை பரிந்துரைத்தார்கள். இன்று உலக சுகாதார நிறுவனம் அதை தவிர்க்கச் சொல்கிறது!
- பிளாஷ்மா சிகிச்சை மூலம் தான் தீர்வு என்றீர்கள் இன்று அதை கைவிட்டுவிட்டீர்கள்.
- Ivermactina, Fabi flue ஆகியவற்றாலும் குணம் பெற முடியாத நிலையே தொடர்கிறது!

இவை எல்லாம் தான் ராம்தேவ் சொன்னார். அனைத்தும் உண்மை தானே! இது மட்டுமா..? இன்று சந்தையில் உள்ள அனைத்து இருமல் மருந்துகளும் அறிவியல் பூர்வமற்றவை, ஆபத்தானவை..என்றும், சந்தையில் உள்ள அனைத்து டானிக் மருந்துகளுமே தடை செய்யப்பட வேண்டியவை என்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மருத்துவர்களே கூறியுள்ளனர்!

- ஸ்டிராய்டு மருந்துகளால் பெரும் பக்க விளைவுகள் ஏற்படுகிறது என்று தெரிந்தும் அவற்றை தருகிறீர்களா இல்லையா..?
- வலி நிவாரணி மாத்திரைகள் உடல் ஆற்றலை சிதைக்கின்றனவா..இல்லையா..?
- தடை செய்யப்பட வேண்டிய மருந்துகளில் அனால்ஜின் தொடங்கி லோபராமைட், டிப்பெனாக்சிலேட் வரை நூற்றுக்கணகான மருந்துகள் பட்டியலிடப்பட்டும் அவற்றை மருத்துவர்கள் பரிந்துரைப்பதும், மருந்தகங்கள் விற்பதும் நடக்கின்றனவா. .இல்லையா..?
- இப்படி நிறைய உதாரணங்களை சொல்லிக் கொண்டு போகலாம்!

இன்றைய தினம் மிக நல்ல மருத்துவர்களும் இந்த துறையில் இருப்பதால் தான் நவீன மருத்துவத்தில் நடக்கும் அட்டூழியங்கள் சற்றே முணுமுணுப்புகளோடு கடந்து செல்கின்றன.ஆனால், இது என்றைக்கு எரிமலையாக வெடிக்கும் எனத் தெரியாது! மக்கள் எப்போதுமே சகித்துக் கொண்டு போய்விடுவார்கள் என்று சொல்ல முடியாது. தனியார்மயப்படுத்தப்பட்ட மருத்துவமானது இன்று தாங்கொணாத துயரமாக - நரகமாக - விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது! மக்களுக்கு சுதந்திரம் தந்து உங்களை அதிகமாக பாதித்தவர்களை திருப்பி தாக்குங்கள் என அனுமதி வழங்கப்பட்டால் இன்று கொள்ளையடிக்கும் தனியார் மருத்துவமனைகளை நொறுக்கி தரைமட்டமாக்கிவிடுவார்கள்! அதே சமயம் நல்ல முறையில் செயல்படுபவர்களை நெஞ்சில் தெய்வமாக நிறுத்தி வழிபடுவார்கள்!

எல்லா மருத்துவ முறைகளுமே மக்களின் நலனுக்கானது தான்!

கொரானா காலகட்டத்தில் பலதரப்பட்ட மருத்துவ வழிமுறைகளை அவரவர்களும் கையாண்டு தங்களை தற்காத்து வருகின்றனர்! சித்தா, ஆயூர்வேதா, ஹோமியோபதி, நேச்சுரோபதி..ஆகிய பல வழிமுறைகளில் தங்கள் நோயை குணப்படுத்தியோர் பலரை நாம் பார்க்கிறோம்! தமிழருவி மணியன் அவர்கள் முழுக்க,முழுக்க சித்தா முறையில் தான் கொரானாவின் கோரப்பிடியில் இருந்து மீண்டு வந்துள்ளார்!

ஆனால், நமது அரசாங்கங்களைப் பொறுத்தவரை அது நவீன ஆங்கில மருத்துவத்திற்கு தான் முழுமையான அங்கீகாரம் வழங்கியுள்ளது! மற்ற மருத்துவத்தில் தீர்வு கிடைக்கிறது என்பது பலதரப்பட்டவர்களின் அனுபவமாக இருந்தாலும் அதை அரசாங்கம் அங்கீகரிப்பதில்லை!

நானும், என் குடும்பத்தினரும், இயற்கை வழியில் மற்றும் சித்தா வழியில் தான் இந்த நெருக்கடியான காலகட்டத்தை கடந்து வருகிறோம்! அதே போல என் நண்பர்கள் பலரும் நிலவேம்பு கசாயம், கபசுரக் குடி நீர், தாளிசாதி வடகம், மூலிகை தேனீர் மற்றும் பாரம்பரிய அரிசி, சிறுதானிய உணவுகள் ஆகியவற்றை உண்டு வாழ்கிறோம்!

நவீன ஆங்கில மருத்துவம் என்பது சமீபத்தியது தான்! அதற்கு முன்பு பல்லாயிரம் ஆண்டுகளாக நமது பாரம்பரிய மருத்துவமே கோடிக்கணக்கான மக்களை காத்து வந்துள்ளது!`அவை வியக்கத் தகுந்த பல அபூர்வ சாதனைகளை செய்துள்ளன.அவை இயற்கையை சார்ந்து இயங்கின. ரகசியமாகப் பேணப்பட்டன. ஆவணப்படுத்தப்படவில்லை! ஆகையால் அவை காலப் போக்கில் வழக்கொழிந்து போய்விட்டன!

''நவீன ஆங்கில மருத்துவம் மட்டுமே நிலைபெற வேண்டும். அதற்கு, மற்றவற்றின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படாதவாறு தவிர்க்க வேண்டும்'' என ஒரு 'கார்ப்பரேட் லாபி' போய்க் கொண்டுள்ளது. தெரிந்தோ, தெரியாமலோ பல நல்ல மருத்துவர்கள் கூட துணை போகிறார்கள். மக்களை வாழவிடுங்கள். மக்களுக்காத் தான் மருத்துவமே ஒழிய மருத்துவத்திற்காகவல்ல மக்கள்!

அறம் இணைய இதழ் ***சாவித்திரி கண்ணன்*** (May 27, 2021)

---

# <u>எதிர்மறை பொருளாதார வளர்ச்சி</u>

கடந்த ஆண்டு முதல் இந்தியா பொருளாதார மந்த நிலை குறைந்து விட்டது என்று பலரும் கூறுகிறார்கள். ஆனால் இது பொருளாதார மந்தநிலை அல்ல பொருளாதார சரிவு மட்டுமே என்று ஓர் அறிஞர் பட்டாளம் கூறத் தொடங்கியுள்ளது.

ஆனால் விரைவில் இந்த விவாதமே அர்த்தமற்றதாக போகிறது என்று அவர்கள் யாரும் உணரவில்லை. அதற்கு காரணம் தற்போது உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் மற்றும் அதன் காரணமாக இந்தியா முழுவதும் அமல்படுத்தப்பட்ட முடக்கநிலை. இதைத்தொடர்ந்து பொருளாதார வளர்ச்சிக்கு பதிலாக எதிர்மறை வளர்ச்சி என்பதே பெரும்பாலும் விவாதிக்கப்படுகிறது.

**<u>எதிர்மறை வளர்ச்சி என்றால் என்ன?</u>**

வளர்ச்சி என்றால் முன்னேறிச் செல்வது என்று பொருள். அதன்படி பார்த்தால் எதிர்மறை வளர்ச்சி என்பது அதற்கு எதிரான பொருளை தரக்கூடியதுதான். அதாவது பொருளாதாரம் சரிகிறது அல்லது பின்னோக்கிச் செல்கிறது என்று பொருள். இதைவைத்துப் பார்த்தோமானால் வளர்வதற்குப் பதிலாகத் தொழில்கள் அனைத்தும் சுருங்கி வருகின்றன. தொழிலில் சரிவு ஏற்பட்டால் விற்பனை சரிவு மற்றும் லாபத்தில் சரிவு நிகழ்ந்துள்ளது என்று பொருள்.

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒட்டுமொத்த மதிப்பு ஜிடிபி எனப்படுகிறது. ஒட்டு மொத்த பொருளாதார உற்பத்தி அதிகரிக்கிறது என்றால் அந்த நாடு பொருளாதாரத்தில் முன்னேறுகிறது என்று பொருள். இந்த வளர்ச்சி ஒருவேளை நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமமானதாக இல்லாமல் கூட போகலாம். ஆனாலும், அதிகமான பொருளாதார வளர்ச்சி விகிதம் என்பது ஒட்டுமொத்த நாட்டுக்குமே நல்ல செய்திதான்.

அனைத்து பகுதிகளும் சம அளவில் முன்னேறவில்லை என்றாலும் கூட முன்பு இருந்த நிலையை விட தற்போதைய நிலையில் நாட்டின் அனைத்துப் பகுதிகளும் மேம்பட்டு இருக்கும். இதன் காரணமாக அரசுக்கு வரி வருவாய் அதிகரிக்கும். இதன் மூலம் அரசுக்கும் செலவிடும் திறன் அதிகமாக இருக்கும். பொருளாதார ரீதியாக தேவையில் உள்ளவர்களுக்காக இந்த வரி வருவாய் மூலம் அரசால் அதிக பணத்தை செலவிட முடியும்.

- ஜிடிபி (GDP) என்றால் என்ன, எப்படி கணக்கிடப்படும், ஏன் முக்கியம்?
- கொரோனா கால கடன், இ.எம்.ஐ (EMI) - எப்போது கட்டுவது நல்லது?: பொருளாதார அறிஞர் ஜெயரஞ்சன் நேர்காணல்

**பொருளாதாரம் எதிர்மறையாக வளர்ந்தால் என்ன செய்வது?**

உதாரணமாக ஒரு கடையில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் விற்கப்பட்டு அதன்மூலம் 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாக பொருளீட்டப்பட்டிருந்தால், அந்தக் கடையில் லாப விகிதம் 15 சதவிகிதம் ஆகும். ஆனால், அதே மதிப்பிலான பொருட்கள் விற்கப்பட்டு அவற்றின் மூலம் கூடுதலாக கிடைக்கும் வருமானம் குறைகிறது என்றால் அந்த கடையின் லாபம் குறைந்து வருகிறது என்று பொருள்.

ஒருவேளை 90 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை மட்டுமே விற்று அதே 15,000 ரூபாயை அந்த கடையின் உரிமையாளர் சம்பாதிக்க முடிகிறது என்றால் அவர் புத்திசாலித்தனமாக தொழில் செய்து மோசமான சூழல் எதுவும் தன்னை பாதிக்காமல் பார்த்துக் கொள்கிறார் என்று பொருள். ஆனால், பொதுவாக மேற்கண்ட இரண்டு சூழல்களும் தற்போது சரிவடைந்து வருவதை காண முடிகிறது.

ஒருமாத காலம் முழுவதும் ஒட்டுமொத்த சந்தையும் மூடப்பட்டு இருந்தால் அதன் விற்பனை லாபம் இரண்டுமே சரிவை சந்திக்கும். ஏப்ரல் மாதம் முதல் இந்தியாவும் அந்த சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளது. ஜூன் மாதம் முதலே தொழில் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க இந்திய அரசு அனுமதி தெரிந்தாலும் விற்பனை இன்னும் பழைய நிலையை எட்டவில்லை. விரைவில் பழைய நிலையை எட்டுவது சாத்தியமானதாகத் தோன்றவில்லை. இதன் காரணமாக இந்தியாவில் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு அதிகரிப்பதற்கு பதிலாக குறைந்து வருகிறது. அதாவது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் சரக்குகள் மற்றும் சேவைகளின் அளவு குறைந்து வருகிறது அல்லது குறையப் போகிறது என்பதையே இது காட்டுகிறது.

**ஒப்புக்கொண்ட இந்திய ரிசர்வ் வங்கி**

தற்போது எதிர்மறை வளர்ச்சி எந்த அளவு உள்ளது இந்தியாவின் பொருளாதார எதிர்மறையாக வளரும் என்று இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது. ஆனால் அது எந்த அளவு என்பதை ரிசர்வ் வங்கி ஆளுநர் தெரிவிக்கவில்லை.

கொரோனா வைரஸ் தொற்று பரவும் போது முடிவடையும் என்று யாராவது கணிக்க முடியும் என்றால், இந்த எதிர்மறை வளர்ச்சி எப்போது முடியும் என்பதை தம்மாலும் கணிக்க முடியும் என்று ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறியுள்ளார். ரிசர்வ் வங்கி ஆளுநர் சொல்வது சரிதான் என்கிறார் சென்டர் ஃபார் மானிட்டரிங் இந்தியன் எகானமி எனும் அமைப்பின் தலைவர் மகேஷ் வியாஸ்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்திய பொருளாதாரத்துக்கு எவ்வளவு சேதாரம் ஆகி இருக்கும் என்பதை கணிப்பது மிகவும் சிரமமானது என்கிறார் அவர்.
5.5 சதவீதம் முதல் 14 சதவீதம் வரை இந்தியப் பொருளாதாரம் சுருங்கும் என இவரது அமைப்பு கணித்துள்ளது. நிலைமை மோசமானால் சரிவு இதை விட அதிகமாக இருக்கும்

என்று அவர் கூறுகிறார். ஆனால் எப்படியும் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு குறைந்தபட்சம் 5.5% எதிர்மறையாக வளர்ச்சியடையும் என்று அவர் கூறுகிறார்.

- வேலைவாய்ப்பு: இந்திய இளைஞர்களின் எதிர்காலம் இனி எப்படி இருக்கும்? - ஓர் எச்சரிக்கை
- டாலரின் அதிகாரம் வீழ்கிறதா? சீனா மற்றும் ரஷ்யா செய்யும் அரசியல்

**உலக வங்கி என்ன சொல்கிறது?**

உலக வங்கியின் கணிப்பின்படி இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 3.2 சதவிகிதம்தான் குறையும். அடுத்த சில மாதங்களில் உலக வங்கி வெளியிட இருக்கும் புதிய அறிக்கையில் ஒருவேளை இந்த சேதத்தின் மதிப்பு அதிகமானதாக இருக்கலாம்.

கடன் மதிப்பீட்டு நிறுவனமான க்ரிசில் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 45 சதவீதம் வரை சரிவடையும் என்றும், ஒட்டுமொத்த நிதியாண்டில் இந்த சரிவு விகிதம் 5% ஆக இருக்கும் என்றும் கூறியுள்ளது.

**சாமானியர்கள் வாழ்க்கை எவ்வாறு பாதிக்கப்படும்?**

ஜிடிபி வளர்ச்சி விகிதம் பெருமளவில் சரிவடைந்து, சாமானியர்கள் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கும், இந்திய அரசு இலக்கு வைத்துள்ள ஐந்து ட்ரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளாதாரமாக இந்தியா மாறுவதில் அது எவ்வாறு தாக்கம் செலுத்தும், இந்த மோசமான சூழலில் இருந்து வெளிவருவது எப்படிபோன்ற கேள்விகள் எழுகின்றன.

ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி சரிவடைந்தால் அது நேரடியாக சாமானிய மக்களை பாதிக்கிறது என்று கூற முடியாது. சாமானிய மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை ஜிடிபி தரவுகள் காட்டுகின்றன என்று கூறுவதே சரி. பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படுவது வேலைவாய்ப்பின்மையை அதிகரிக்க வைக்கும். தங்கள் வருவாய் குறையப் போகிறது என்று அறியும் மக்கள் செலவுகளை குறைத்துக் கொண்டு சேமிப்பை அதிகப்படுத்துவார்கள். அரசாங்கங்களும் நிறுவனங்களும் கூட இதையே பின்பற்றுவார்கள். வேலை இழப்புகள் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆனால் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகாது.

சென்டர் ஃபார் மானிட்டரிங் இந்தியன் எகானமி-இன் தரவுகளின்படி ஜூலை மாதம் மட்டும் இந்தியா முழுவதும் மாதச் சம்பளம் பெற்று வந்த சுமார் 50 லட்சம் பேர் தங்கள் வேலைகளை இழந்துள்ளனர்.
இது ஒரு விஷச் சுழலை உண்டாக்குகிறது. வேலை வாய்ப்பை இழந்த மக்கள் வருமானம் இல்லாததால் செலவுகளை பெருமளவில் குறைப்பார்கள். இதன் காரணமாக தொழில்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பாதிப்பை சந்திக்கும். அவர்களின் விற்பனை பொருட்களுக்கான தட்டுப்பாடு குறையும். இதன் காரணமாக தொழில்துறை உற்பத்தியும் குறையும். வங்கியில் தங்கள் பணத்தை சேமிக்கும் மக்கள் அதற்காக குறைந்தளவிலான வட்டியே பெறுவார்கள்.

இன்னொரு பக்கம் வங்கிக் கடன் பெறுபவர்களின் எண்ணிக்கையும் குறையும். தங்களுக்கு ஏற்கனவே இருக்கும் கடன்களைக் கூடத் திருப்பிச் செலுத்த மக்கள் தொடங்குவார்கள். வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவது என்பது நல்லது போல தோன்றலாம். ஆனால் இவை அனைத்தும் அச்சத்தின் காரணமாக நிகழ்பவை. தங்கள் எதிர்காலம் ஒளிமயமாக இருக்காது என்பதை அறிந்த மக்கள் இவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை இது காட்டுகிறது.

இதன் காரணமாகத்தான் புதிதாக கடன் வாங்குவதும் குறைகிறது. ஏனென்றால் வரும் காலங்களில் கடனை திருப்பி செலுத்துவதற்கு தங்களிடம் போதிய வருமானம் இருக்குமா என்று அவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

இதே மாதிரியான போக்கு நிறுவனங்களிடையே நிகழ்வதையும் பார்க்கலாம். சமீப காலங்களில் கடன் வாங்கிய அல்லது தங்கள் கடனை திரும்ப செலுத்துவதற்காக தங்கள் பங்குகளை விற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை பார்க்க முடிகிறது.
அதற்கு மிகச் சிறந்த உதாரணம் ரிலையன்ஸ் நிறுவனம். தங்கள் நிறுவனம் கடனற்ற நிறுவனமாக இருக்க வேண்டும் எனும் நோக்கில் தங்களுக்கு இருந்த சுமார் 1.5 லட்சம் கோடி ரூபாய் கடனை பங்கு விற்பனை மூலம் ரிலையன்ஸ் நிறுவனம் திரும்பச் செலுத்தியுள்ளது.

## ஐந்து ட்ரில்லியன் பொருளாதாரம்

5 ட்ரில்லியன் டாலர் மதிப்புள்ள பொருளாதாரமாக இந்தியா மாறுவதை இது பாதிக்குமா? தற்போது இந்த கேள்வியைக் கேட்பது முட்டாள்தனமாகத் தோன்றலாம். ஆனால் அப்படி நினைத்தால் மனிதர்களால் எந்த பிரச்சனையிலிருந்தும்மீண்டு வர முடியாது. நெருக்கடியான சூழ்நிலைகளில் வாய்ப்புகளை கண்டறிவது குறித்து பிரதமர் நரேந்திர மோதி பேசியுள்ளார். இத்தகைய வாய்ப்புகள் இதற்கு முன்னரும் இருந்தன. சீனாவுக்கு செல்லும் முதலீடுகளை இந்தியா பெறுவது குறித்த பேச்சுகள் எழுவது இது முதல்முறை அல்ல.

ஆனால் வெளிநாட்டு நிறுவனங்களை இந்தியாவை நோக்கி வர வைக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுத்தால் அந்த நிறுவனங்கள் இந்தியாவின் நடவடிக்கை தங்களுக்கு பலனளிக்கும் என்று நம்புமா? ஒருவேளை வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்யத் தொடங்கினால் அதன் காரணமாக பெருமளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும். அதன் மூலம் தற்போது உண்டாகி உள்ள பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்கொள்ள முடியும்.

ஆனால் இது பெரிய கனவுகள் காண்பதற்கான நேரம் போலத் தெரியவில்லை. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க வேண்டும் எனும் நோக்கில் இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகளில் சமரசம் செய்துகொள்ளக் கூடாது என்பதும் மிகவும் முக்கியமானது. தற்போது நிலையை சமாளிக்க வல்லுநர்கள் பல ஆலோசனைகளைக் கூறி வருகிறார்கள். ஆனால் யார் முன்வைக்கும் தீர்வை செயல்படுத்துவது, எந்த ஆலோசனை செயல்திறன் மிக்கதாக இருக்கும் என்பதை கண்டறிவது மிகவும் சவாலான காரியம்.
பொருளாதாரத்தை மீள் கட்டமைக்க இன்னொரு நிதி உதவித் தொகுப்பை அறிவிப்பதற்கான சமிக்கைகளை இந்திய அரசு வெளியிட்டுள்ளது. அதற்கு தற்போதைய பெருந்தொற்றுப் பரவல் முடிவடைய வேண்டும். இல்லாவிட்டால் அப்படி அளிக்கப்படும் உதவி தொகுப்பும் பயனற்றதாக போய்விடும் என்று இந்திய அரசு காத்திருக்கிறது.

**இப்போது இருக்கும் பல கேள்விகளுக்கான பதில்கள் ஒன்றே ஒன்றுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. அது கொரோனா வைரஸ்.**

**நன்றி : அலோக் ஜோஷி**, முன்னாள் ஆசிரியர், சி.என்.பி.சி(CNBC News)

# இந்திய இடைத்தரகு நிறுவனத்துக்கு ரூ.8.6 கோடி கமிஷன் ரபேல் விமான கொள்முதலில் ஊழல்: அம்பலப்படுத்தியது பிரான்ஸ் ஊழல் தடுப்பு துறை

(Dinakaran 2021-04-06@ 00:24:54)




புதுடெல்லி: பிரதமர் மோடி நேரடியாக சம்மந்தப்பட்ட ரபேல் போர் விமான கொள்முதலில் ஊழல் நடந்திருப்பதற்கான ஆதாரம் சிக்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் இந்திய இடைத்தரகராக செயல்பட்ட நிறுவனத்திற்கு ரூ.8.6 கோடி கமிஷன் தரப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தை பிரான்ஸ் ஊழல் தடுப்பு துறை அம்பலப்படுத்தி இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்திய விமானப்படையை நவீனப்படுத்தும் வகையில் புதிய அதிநவீன போர் விமானமான பிரான்சின் ரபேல் போர் விமானம் வாங்க மத்திய அரசு முடிவு செய்தது. கடந்த காங்கிரஸ் ஆட்சியில் ஒரு விமானத்தின் விலை ரூ.526 கோடி என்ற வீதத்தில் 126 விமானங்கள் வாங்க பிரான்சின் டசால்ட் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடந்து வந்தது.

இதன் பின், மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மோடி பிரதமரானதும், அவர் கடந்த 2016ல் பிரான்ஸ் நாட்டிற்கு அரசு முறை பயணம் செய்தார். அப்போது, ரபேல் விமானம் வாங்குவதில் புதிய ஒப்பந்தம் போடப்பட்டது. இதன்படி ஒரு விமானம் ரூ.1670 கோடி என்ற விலையில் 36 விமானங்கள் வாங்க ₹59,000 கோடிக்கு பிரதமர் மோடி ஒப்பந்தத்தை முடிவு செய்தார். இதில் பெரும் ஊழல் நடந்திருப்பதாக எதிர்க்கட்சியான காங்கிரஸ் குற்றம்சாட்டியது. விமானத்தை அதிக விலை கொடுத்து வாங்குவதன் அவசியம் குறித்து கேள்வி எழுப்பியது. இந்த விவகாரம் கடந்த 2019 மக்களவை தேர்தல் பிரசாரத்தில் பெருமளவில் எதிரொலித்தது.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன. வழக்கு முடிவுகள் மத்திய அரசுக்கு சாதகமாக அமைந்தன. இந்நிலையில், ரபேல் போர் விமான கொள்முதலில் ஊழல் நடந்திருப்பதாக புதிய குற்றச்சாட்டு ஆதாரத்துடன் வெளியாகி உள்ளது. ரபேல் ஒப்பந்தம் கடந்த 2016ல் உறுதியானதும் 2018 அக்டோபரில் டசால்ட் நிறுவனம் இந்தியாவில் துணை ஒப்பந்த நிறுவனமான டெப்சிஸ் சொலிசஷன் என்ற நிறுவனத்திற்கு ரூ.8.6 கோடி கமிஷனாக கொடுத்துள்ளது.

இந்த விவகாரத்தை பிரான்ஸ் ஊழல் தடுப்பு துறை கண்டுபிடித்திருப்பதாக அந்நாட்டின் ஆன்லைன் பத்திரிகைய மீடியா பார்டு தெரிவித்துள்ளது. பிரான்சின் பெரிய நிறுவனங்களின் ஆண்டு வரவு செலவு கணக்குகளை அந்நாட்டின் ஊழல் தடுப்பு துறை ஆய்வு செய்து வருகிறது. அதன்படி, கடந்த 2017 மற்றும் 2018ல் டசால்ட் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளில் பல்வேறு குளறுபடி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விஷயத்தை ஆய்வு செய்த போதுதான், ரபேல் ஒப்பந்தம் முடிவானதும் டசால்ட் நிறுவனம் இந்திய இடைத்தரகு நிறுவனமாக செயல்பட்ட டெப்சிஸ் நிறுவனத்திற்கு ரூ.8.6 கோடி கொடுத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து டசால்ட் நிறுவனம் அளித்த விளக்கத்தில், “ரபேல் விமானத்தின் மாதிரிகளை செய்து தருவதற்காக ரூ.8.6 கோடி டெப்சிஸ் நிறுவனத்திற்கு தரப்பட்டது” என கூறியது. ஆனால், அதுபோன்ற எந்த மாதிரி புகைப்படங்களையும் டசால்ட் நிறுவனம் சமர்ப்பிக்கவில்லை. எனவே இது இடைத்தரகு நிறுவனத்திற்கு ‘அன்பளிப்பாக’ தரப்பட்ட பணம் என்பது உறுதியாகி உள்ளது. இந்த விவகாரம் இந்திய அரசியலில் மீண்டும் பெரும் புயலை கிளப்பி உள்ளது. பிரதமர் மோடி பதிலளிக்க வேண்டும்

காங்கிரஸ் தலைமை செய்தி தொடர்பாளர் ரன்தீப் சுர்ஜிவாலா நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில், “இந்த பணம், ‘வாடிக்கையாளருக்கு தந்த பரிசு’ என டசால்ட் நிறுவனத்தின் செலவினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதில் உண்மையிலேயே யாருக்கு எவ்வளவு கமிஷன் தரப்பட்டுள்ளது, இந்திய அரசு யாருக்காவது கமிஷன் தந்துள்ளதா என்பது குறித்து வெளிப்படையான நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும். இது குறித்து பிரதமர் மோடி விளக்கமளிக்க வேண்டும்” என்றார்.

மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் கூறுகையில், “இந்த குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது. உச்ச நீதிமன்றம், மத்திய கணக்கு தணிக்கை ஆய்வில் எந்த தவறும் நடக்கவில்லை என உறுதிபடுத்தப்பட்டுள்ளது” என்றார்.

---

# சாலை மீது சாலை

சாலை மீது சாலை போட்டு வீடுகளை குழிக்குள் தள்ளும் அபாயகரமான செயலுக்கு இன்று தமிழக அரசு முடிவுரை எழுதியுள்ளது. இனி பழுதடைந்த பழைய சாலையை அப்புறப்படுத்திய பிறகு தான் புதிய சாலை போட வேண்டும். எத்தனை ஆழத்திற்கு பழைய சாலையை அப்புறப்படுத்துகிறார்களோ அந்த அளவிற்கு மட்டும் தான் புதிய சாலைகள் போடப்பட வேண்டும். அதாவது பழைய சாலை இருந்த மட்டத்தை விட சிறிதளவும் புதிய சாலை உயரமாக இருக்க கூடாது.

இந்த உத்தரவு மிகவும் முக்கியமானது. பல கனவுகளுடன் புதிய வீடு கட்டி குடியேறுபவர்களின் வீடுகளை 10 வருடத்திலேயே சாலை உயரத்தை அதிகரிப்பதன் மூலம் மழை நீர் சேகரிப்பு குளங்களாக மாற்றிக்கொண்டு இருந்தார்கள். மழைக்காலம் வந்தாலே மோட்டார் வாடகைக்கு எடுத்து வீட்டு உள்ளே வரும் மழை நீரை வெளியேற்றும் வேலையை செய்ய வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டார்கள். சென்னை மற்றும் பல நகரங்களில் லட்சக்கணக்கில் செலவு செய்து மக்கள் தங்கள் வீடுகளை உயரப்படுத்தும் பணிகளை செய்து வருகிறார்கள். சாலை உயரம் அதிகரிக்கும் என்று பயந்து மக்கள் தங்கள் வீட்டு உயரத்தை தேவைக்கு அதிகமாக உயர்த்தி வாகனங்கள் உள்ளே செல்ல மிகப்பெரிய சாய்தளங்களை சாலையை ஆக்கிரமித்து அமைத்தார்கள். தற்பொழுது போடப்பட்டுள்ள உத்தரவு கண்டிப்புடன் செயல்படுத்தப் பட்டால் இந்த துயரங்களில் இருந்து மக்களுக்கு மிகப்பெரிய விடுதலை கிடைக்கும்.

புதிய சாலைகள் அமைக்கும் முன்பு பழைய சாலைகளை அகற்ற வலியுறுத்தி சென்னை மாநகராட்சியுடன் அறப்போர் இயக்கம் பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளது. பல இடங்களில் அறப்போர் இயக்க தன்னார்வலர்களின் புகார்களால் பழைய சாலைகள் அகற்றப்பட்டு வந்தாலும் இனி பழைய சாலையை அகற்றாமல் எந்த புதிய சாலையும் போடக்கூடாது என்று மக்கள் துணிந்து சொல்லலாம். எந்த ஒரு காரணத்தையும் சொல்லி நம்முடைய சாலை உயரத்தை ஒப்பந்ததாரர்கள் அதிகரிக்க முடியாது.

# *எது கெடும் ?*

## தமிழ் மூதாட்டி ஔவையார் சொல்

(01) பாராத பயிரும் கெடும்.
(02) பாசத்தினால் பிள்ளை கெடும்.
(03) கேளாத கடனும் கெடும்.
(04) கேட்கும்போது உறவு கெடும்.
(05) தேடாத செல்வம் கெடும்.
(06) தெகிட்டினால் விருந்து கெடும்.
(07) ஓதாத கல்வி கெடும்.
(08) ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
(09) சேராத உறவும் கெடும்.
(10) சிற்றின்பன் பெயரும் கெடும்.
(11) நாடாத நட்பும் கெடும்.
(12) நயமில்லா சொல்லும் கெடும்.
(13) கண்டிக்காத பிள்ளை கெடும்.
(14) கடன்பட்டால் வாழ்வு கெடும்.
(15) பிரிவால் இன்பம் கெடும்.
(16) பணத்தால் அமைதி கெடும்.
(17) சினமிகுந்தால் அறமும் கெடும்.
(18) சிந்திக்காத செயலும் கெடும்.
(19) சோம்பினால் வளர்ச்சி கெடும்.
(20) சுயமில்லா வேலை கெடும்.
(21) மோகித்தால் முறைமை கெடும்.
(22) முறையற்ற உறவும் கெடும்.
(23) அச்சத்தால் வீரம் கெடும்.
(24) அறியாமையால் முடிவு கெடும்.
(25) உழுவாத நிலமும் கெடும்.
(26)உழைக்காத உடலும் கெடும்.
(27) இறைக்காத கிணறும் கெடும்.
(28) இயற்கையழிக்கும் நாடும் கெடும்.
(29) இல்லாலில்லா வம்சம் கெடும்.
(30) இரக்கமில்லா மனிதம் கெடும்.
(31) தோகையினால் துறவு கெடும்.
(32) துணையில்லா வாழ்வு கெடும்.
(33) ஓய்வில்லா முதுமை கெடும்.
(34) ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்.
(35) அளவில்லா ஆசை கெடும்.
(36) அச்சப்படும் கோழை கெடும்.
(37) இலக்கில்லா பயணம் கெடும்.
(38) இச்சையினால் உள்ளம் கெடும்.
(39) உண்மையில்லா காதல் கெடும்.
(40) உணர்வில்லாத இனமும் கெடும்.
(41) செல்வம் போனால் சிறப்பு கெடும்.
(42) சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
(43) தூண்டாத திரியும் கெடும்.
(44) தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
(45) காய்க்காத மரமும் கெடும்.
(46) காடழிந்தால் மழையும் கெடும்.
(47) குறி பிறழ்ந்தால் வேட்டை கெடும்.
(48) குற்றம் பார்த்தால் சுற்றம் கெடும்.
(49) வசிக்காத வீடும் கெடும்.
(50) வறுமை வந்தால் எல்லாம் கெடும்.
(51) குளிக்காத மேனி கெடும்.
(52) குளிர்ந்து போனால் உணவு கெடும்.
(53) பொய்யான அழகும் கெடும்.
(54) பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
(55) துடிப்பில்லா இளமை கெடும்.
(56) துவண்டிட்டால் வெற்றி கெடும்.
(57) தூங்காத இரவு கெடும்.
(58) தூங்கினால் பகலும் கெடும்.
(59) கவனமில்லா செயலும் கெடும்.
(60) கருத்தில்லா எழுத்தும் கெடும்.

**கெடாமல் பாதுகாக்க வேண்டியது அவரவர் பொறுப்பு..**

# கிரிப்டோ கரன்சி- எனும் மறைமுக நாணயம்.

பிட்காயின் பற்றிய செய்திகள் நம்மை மலைக்க வைக்கின்றன. எளிதில் புரியமுடியாத தொழில் நுட்ப சாதனைகளில் இது ஒன்று எனலாம்.

ஒரு காலத்தில் தங்கம், வெள்ளி நாணயங்களாக இருந்தன. பின்னர் இவைகளை இருப்பாக வைத்து காகிதப் பணத்தை அறிமுகப்படுத்தின. அடுத்து புனித உலோக இருப்பை அடிப்படையாக இருந்ததை மாற்றி தேச மொத்தவருவாயை (GDP)அடிப்படையாகக் கொண்டு காகிதப் பணங்களை நாடுகள் அச்சிட்டுவருகின்றன.

கணினி யுகத்தில் காகிதப் பணப்புழக்கம் சுருங்கி பணம் வங்கி கணக்குகளாகி எண் வடிவம் பெற்றன. இன்று வங்கி கணக்கு இல்லாமல் பணப் புழக்கம் இருக்க கூடாது என்ற நிலையை உருவாக்க அரசுகள் முயற்சிக்கின்றன.

அதனைத் தாண்டி கணினி உதவியுடன் மறைமுக நாணயம் உருவாகிவிட்டது. உங்களிடம் திறன்மிக்க கணினி இருந்தால் உங்களது பணப்பைக்குள் பணம் வைத்திருப்பது போல் உங்கள் பணத்தை கணினியில் இருக்கும் பணப்பையில் போட்டு வைக்கலாம்..அதற்கு ஏதாவது ஒரு கிரிப்டோகரன்சி வலை தளத்தில் இருக்கும் நாணயத்தை வாங்கினால் போதும். வெளி நாடு போகும் போது பணத்தை கையில் எடுத்துப் போகவேண்டியதில்லை .உங்களது மனதில் பணப்பையைத் திறக்கும் சங்கேத மொழி இருந்தால் போதும். இந்த பரிவத்தனையை உங்களைத் தவிர வேறு யாரும் அறியமுடியாது.

இதன் சிறப்பு என்னவென்றால் இந்தப் பணம் காகிதத் தாளில் கள்ள நோட்டு அடிக்கிறமாதிரி கணனியில் தயாரிக்க முடியாது . ஒருவேளை விவரம் அறிந்த ஒருவன் தயாரித்தால் அது தனிக்கணக்காக மாறும் இதற்கு கமிஷன் கிடைக்கும். இதனை மைனிங் (Mining) என்பார்கள். இந்த மறைமுக நாணயத்தை எந்த நாட்டு நாணயமாகவும் எளிதில் மாற்றிவிடலாம். அதற்கான வசதி ,இதில் பல நாட்டவர்கள் அவரவர் பணத்தை முதலீடு செய்வதால் உருவாகிவிடுகிறது.

பணக்காரர்கள் மட்டுமே புழங்க கூடிய நாணயமாக கணினி " படிவ" நாணயங்கள் இருக்கின்றன ஏழைகளுக்கு எட்டாத ஒன்று என்பதை மனதில் கொள்ள வேண்டும்.. இன்று உலகளவில் மிகவும் பிரபலமான பத்து மறைமுக நாணயங்கள் உள்ளன பிட்காயின், எத்திரியம், லைட்காயின், கார்டானோ, போல்காடாட், ஸ்டெல்லர், செயின் லிங்க், ட்டிதெர், மோன்ஈரோ ஒரு நாணயத்தின் விலை பல லட்சரூபாய் மதிப்பிலான தாகும். உதாரணமாக ஒரு பிட்காயின் விலை 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் டாலர்களாகும். அதாவது ரூபாய் 35 லட்சமுதல் 40 லட்சம் கொடுத்து வாங்கும் சக்தி உள்ளவர்களே வாங்கமுடியும். இந்த கரன்சியின் மதிப்பை பணச் சந்தை தீர்மானிப்பதால் விலைகளின் ஏற்ற இறக்கம் பலரை ஓட்டாண்டியாக்கிவிடும்.

இவைகளில் பெரிய நிறுவனங்கள் வங்கிகள். பங்குச் சந்தை சூதாடிகள் முதலீடு செய்கின்றன. பிளாக்மெயில் செய்து பணம் பறிப்பவர்களும் இந்த கிரிப்டோ கரன்சியில் பெறுகிறார்கள். சமீபத்தில் அமெரிக்காவில் ஒரு எண்ணெய் நிறுவனத்தை பிளாக் மெயில் செய்து இந்த மறைமுக நாணயத்தை பெற்றனர். பிரபல அமெரிக்க கார்ப்பரேட் நிறுவனமான டெக்ஸ்லா கிரிப்டோகரன்சியில் முதலீடு செய்திருப்பதை அறிவித்தது. இந்தியாவிலிருந்து ஒரு பில்லியன் டாலர்கள் இந்த மறைமுக நாணயங்களில் பணக்காரர்கள் முதலீடு செய்திருப்பதாக பிசினஸ் ஸ்டான்டர்டு கூறுகிறது. பிரபல அரசியல்வாதிகள் மொத்த வர்த்தகர்கள் பெருமுதலாளி குடும்பங்கள் தவிர மற்றவர்கள்

இந்த நாணயங்களை வாங்க இயலாது என்பதை சொல்லித்தான் தெரியவேண்டுமா!.. அமெரிக்கா முதல் சீனா வரை இந்தியா உட்பட இந்த மறைமுக நாணயத்தை தடை செய்யவில்லை. ஆனால் சில விதிகளை ஏற்படுத்தியுள்ளது. சீனா நிதி நிறுவனங்கள் கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்யக் கூடாது என்று தடை உள்ளது. ரஷ்யாவில் பொருட்களை வாங்க ரூபிள் தவிர வேறு நாணயங்களை பயன்படுத்தத் தடைவிதித்துள்ளது அமெரிக்கா டாலர் ஆதிகத்தை பலப்படுத்த உதவும் என்பதால் ..எந்த தடையும் போடவில்லை.

வெனிசுலா அரசு, இந்த நாட்டின் டாலர் கணக்கை அமெரிக்கா முடக்கியதால் அந்நிய செலவாணியைப் பெற கிரிப்டோ கரன்சிமுறையை பின்பற்றுகிறது. சுருக்கமாக சொன்னால் இந்த மறைமுக நாணயம் அரசியல் ஆயுதமாக பயன்படுகிறது. மோடி அரசோ, கார்ப்பரேட் நிறுவனங்கள் ,வங்கிகள் கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்திருந்தால் வரவு செலவைக் கணக்கில் காட்டினால் போதும் என்கிறது..

நவ தாராளமய கட்டமைப்பை சார்ந்து இந்தியா இருக்கும் வரை இந்த பணக்கார்களின் சேமிப்பு கிரிப்டோ கரன்சி முதலீடாக போகுமே தவிர பொருளாதார கட்டமைப்பு முதலீடாக ஆகாது.. அதாவது இந்தியப் பொருளாதாரத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது அல்லது உதவாது. இதுவும் செல்வந்தர்களின் கறுப்புப்பண சுழற்சிக்கே வழி வகுக்கும். செல்வந்தர்களுக்கு ஸ்விஸ் வங்கி போல் இதில் கறுப்புப்பணத்தை சேமித்து வைத்துக்கொள்ளலாம்

நமது நாட்டில் கிரிப்டோ கரன்சி சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் நமது ரிசர்வ் வங்கி அவற்றை இதுவரை ஒழுங்குமுறைப் (Regulation) படுத்தவில்லை. இவை இந்தியாவில் கறுப்புப் பணத்தையும் பங்குச்சந்தை சூதாட்டதையும் தான் செயல்பட நிகழ்த்தும்.

---

## கொரோனா இன்று இந்தியாவை கொல்லவில்லை!

*ஊழல் நிறைந்த இந்தியர்கள் இன்று இந்தியர்களைக் கொல்கிறார்கள்... !*

*முடிந்த அனைத்திலும் துஷ்பிரயோகம்!*

*வாட்ஸ்அப் பகிர்தலில் வலி மிகுந்த பதிவு*

ரூ 700-800 விலையுள்ள ஆக்சிமீட்டரை 3000 + ரூபாய்க்கு விற்பனை செய்வது நம் இந்தியர்கள் தான்..!

ஆக்ஸிஜனின் கருப்பு சந்தைப்படுத்துபவர்கள் இந்தியர்கள் தான்..!

இந்த ரெமெடிசீவரை ரூ 20000 + பிளஸுக்கு விற்பது இந்தியர்கள் தான்..!

தகன காடுகளில் நேர்மையற்ற செயல்களைச் செய்து, தகனத்திற்கு ரூ 20,000 கேட்கிறார்கள். இந்தியர்கள் தான்..!

தேங்காய் நீர், பழங்கள், காய்கறிகள், முட்டை, கோழி, பயறு போன்றவற்றில் கொள்ளையடிப்பது முதல் மருத்துவமனைகளில் படுக்கைகள் பெறுவது வரை இந்த மக்கள் அனைவரும் கொள்ளையடித்துள்ளனர் இந்தியர்கள் தான்..!

ஒரு நாட்டில் யாருக்கு வாய்ப்பு கிடைத்தாலும், சூழ்நிலையின் ஈர்ப்பைப் பொருட் படுத்தாமல், சுற்றியுள்ள துன்பங்களைப் பொருட்படுத்தாமல் கொள்ளையடிக்கத் தொடங்கினர்.

நாம் எவ்வளவு அப்பாவிகள் ..

வைட்டமின் சி அதிகமாக எடுக்க டாக்டர்கள் கேட்கும்போது கிலோவுக்கு ரூ .50 மதிப்புள்ள எலுமிச்சை கிலோவுக்கு ரூ .150 க்கு விற்கத் தொடங்குபவர்கள் ..

தேங்காய் நீரை 40-50 ரூபாய் உள்ளதை ₹ 100 க்கு விற்கிறவர்கள் ..

நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறையைக் கேட்பவர்கள், ஆக்ஸிஜன்களின் கறுப்பு மார்க்கெட்டிங்கில் 60,000 க்கு விற்கிறார்கள் அல்லது நோயாளியிடமிருந்து பணத்தை எடுத்த பிறகு மோசமாக மறைந்து விடுவார்கள்..!

இறக்கும் நோயாளிகளின் அவலநிலையைப் பார்ப்பவர்கள், ரெம்டெசிவிர் ஊசியின் கருப்பு சந்தைப்படுத்தலைத் தொடங்குகிறார்கள்..

பராசிட்டமால் ஊசி மூலம் கலந்து விசுவாசத்தை விற்கிறார்கள் ..
இறந்த உடலைக் கொண்டுவரும் பெயரில் அருகில் உள்ள மயானம் போக ரூபாய் 36000 கேட்கத் தொடங்குபவர்கள் ..

நோயாளியை அருகில் அமைந்துள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது பற்றி பேசுபவர்கள், ஆம்புலன்ஸ் கட்டணம் 20 முதல் 25 ஆயிரம் வரை கேட்கத் தொடங்குகிறார்கள் ..

நாம் உண்மையில் மிகவும் அப்பாவியா .. ?
இல்லை. சடலங்களின் சதைகளை சொறிந்த கழுகுகளா ...

இறந்த பிறகு அதன் வயிற்றை நிரப்ப கழுகு கீறல்கள் இறந்த உடல்களைக் கீறிக்கொண்டிருக்கின்றன,

ஆனால் நாம் எங்கள் பெட்டகங்களை நிரப்ப உயிருள்ள மக்களை சுரண்டல் செய்கிறோம்,

அத்தகைய செல்வத்தை நாம் எங்கே எடுக்கிறோம் அல்லது யாருக்காக..? ..

நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா.. ?

ஒருமுறை சிந்தியுங்கள்..

ஒரு நாள் எல்லோரும் கணக்கை செலுத்த வேண்டியிருக்கும்.

கொரோனா இன்று இந்தியாவை கொல்லவில்லை

**கொரோனா இன்று இந்தியாவை கொல்லவில்லை ஊழல் நிறைந்த இந்தியர்கள் இன்று இந்தியர்களைக் கொல்கிறார்கள்...!**

# கூட்டுறவுச் சங்க ஊழல்

திருச்சி மாவட்டம் தொட்டியம் அருகே உள்ள அரசலூர் ஊராட்சிக்குட்பட்ட, வரதராஜபுரம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், 9 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளது. 5 ஊழியர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளனர். ஈரோடு பவானி ரோடு அசோக புரத்தில் உள்ள, தமிழ்நாடு துணி நூல் மற்றும் பதனிடும் தொழிற்சாலை கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தில், சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்குவதில் முறைகேடு செய்து 2¼ கோடி ரூபாய் கையாடல் செய்ததாக, தலைவர் உள்பட 4 பேரை ஈரோடு வணிக குற்றப் புலனாய்வுப் பிரிவு போலீஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். மேலும், இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள சங்கச் செயலாளரை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்த முறைகேடுகள் குறித்து துக்ளக்கில் *(13.1.21)* 'கூட்டுறவு சங்க முறைகேடு' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டிருந்தோம். கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் கானன் இது சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இந்த முறைகேடுகளை 2010-ஆம் ஆண்டில் இருந்து விசாரிக்கவும் உத்தரவிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து விசாரிக்க விசாரணை அதிகாரிகள் முனைந்துள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களைத் தொடர்ந்து கண்காணித்து அவற்றை முன்னேற்ற வேண்டிய அதிகாரிகளே முறைகேட்டில் ஈடுபடும்போது, இது போன்ற ஊழல்கள் அம்பலமாகின்றன.

ஆனால், கூட்டுறவுத் துறையில் உள்ள சில அதிகாரிகள், ஊழியர்கள் அதற்குச் சளைத்தவர்கள் அல்ல என்று காண்பிக்கும் விதமாக, கோடிக்கணக்கில் முறைகேட்டில் ஈடுபட்டு கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுரைக் கடிதம் அனுப்பியுள்ளார். அதில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் முறைகேடுகள் நடைபெற்று, பல ஆண்டுகள் கடந்த பிறகு கண்டுபிடிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைத் தவிர்க்கவும், ஆய்வுப் பணிகளை நுணுக்கமாகவும், விரிவாகவும் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு இந்தச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இதனால் முறைகேடுகள் குறையுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**- எஸ்.பி.சண்முகம்**

8 | துக்ளக் - 26.5.2021

# சேலத்தில் புதிய மின் இணைப்புக்கு லஞ்சம் வாங்கி கைதான மின்வாரிய வணிக உதவியாளர் 'சஸ்பெண்ட்'

**சேலம், ஏப். 30:** சேலம் மாவட்டம் காடையாம்பட்டி தெற்கத்தியான் காட்டை சேர்ந்தவர் பிரபு. விவசாயியான இவர், விளை பொருட்களை பாதுகாப்பாக வைக்க, தன் நிலத்தில் சிறிய அளவிலான ஷெட் அமைக்க முடிவு செய்துள்ளார். அதற்காக மின் இணைப்பு பெற காடையாம்பட்டி மின் உதவிபொறியாளர் அலுவலகத்துக்கு கடந்த 23ம்தேதி சென்றுள்ளார். அங்கு வணிக உதவியாளராக பணிபுரிந்து வந்த தளவாய்பட்டியை சேர்ந்த சுந்தரராஜன்(49). டிபாசிட் தொகையாக ₹3 ஆயிரமும், புதிய கம்பம் நடுவதற்கு ₹15,470ம், தனக்கு ₹5000 லஞ்சம் தரவேண்டும் என பிரபுவிடம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத பிரபு, இது தொடர்பாக சேலம் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் தெரிவித்தார். லஞ்ச ஒழிப்பு போலீசாரின் அறிவுரையின் படி, கடந்த 26ம்தேதி காலை காடையாம்பட்டி மின்வாரிய அலுவலகத்துக்கு சென்ற பிரபு, ரசாயணம் தடவப்பட்ட ₹5 ஆயிரத்தை வணிக உதவியாளர் சுந்தரராஜனிடம் வழங்கினார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக அவரை கைது செய்தனர். மேலும், வணிக உதவியாளர் மீது வழக்கு நடவடிக்கை எடுத்தனர். இதையடுத்து மேட்டூர் மின்வாரிய மேற்பார்வை பொறியாளருக்கு லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில், லஞ்ச வழக்கில் சிக்கிய காடையாம்பட்டி மின்வாரிய வணிக உதவியாளர் சுந்தரராஜன் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்து அறிக்கை அளிக்கப்பட்டது. இதன்பேரில், மேற்பார்வை பொறியாளர் வெங்கடேசன் விசாரணை நடத்தி, லஞ்ச வழக்கில் கைதான வணிக உதவியாளர் சுந்தரராஜனை சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளார்.

ரெம்டெசிவிர் மருந்து பதுக்கி கூடுதல் விலைக்கு விற்ற

# திருவண்ணாமலை அரசு மருத்துவமனை கம்பவுண்டர், சென்னை டாக்டர் கைது

## குடிமை பொருள் கடத்தல் பிரிவு போலீசார் அதிரடி




▶ கள்ளச்சந்தையில் விற்றதாக பறிமுதல் செய்த ரெம்டெசிவிர் மருந்து மற்றும் கைதான டாக்டர் முகமது இம்ரான்கான்.

**திருவண்ணாமலை, ஏப்.30:** கொரோனா நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் ரெம்டெசிவிர் மருந்தை பதுக்கி கூடுதல் விலைக்கு விற்ற திருவண்ணாமலை அரசு மருத்துவமனை கம்பவுண்டர் மற்றும் சென்னை டாக்டரை போலீசார் கைது செய்தனர்.

கொரோனா நோய்த் தொற்று நாளுக்குநாள் அதிகரித்து வரும் நிலையில், தீவிர சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளுக்கு பயன்படுத்தும் ரெம்டெசிவிர் மருந்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த மருந்து ₹20 ஆயிரம் முதல் ₹40 ஆயிரம் வரை கள்ள சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சென்னை தாம்பரம் பகுதியில் கிளினிக் நடத்தி வரும் முகமது இம்ரான்கான் என்பவர் ரெம்டெசிவிர் மருந்தை பதுக்கி கூடுதல் விலைக்கு விற்று வருவதாக குடிமை பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், குடிமைபொருள் கடத்தல் தடுப்பு பிரிவு சிஐடி எஸ்பி சாந்தி தலைமையிலான போலீசார் தாம்பரம் பகுதியில் நேற்று மாலை வாகன தணிக்கை செய்தனர்.

அப்போது, அவ்வழியாக காரில் வந்த டாக்டர் முகமது இம்ரான்கானை தடுத்து நிறுத்தி அவரது காரில் சோதனை நடத்தினர். அதில் கொரோனா நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் ரெம்டெசிவிர் மருந்து 17 சிரஞ்சுகள் இருப்பது தெரியவந்தது. உடனடியாக அந்த மருந்துகளை பறிமுதல் செய்த போலீசார், முகமது இம்ரான்கானை கைது செய்தனர். விசாரணையில், திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கம்பவுண்டராக பணிபுரியும் விக்னேஷ்(47) என்பவரிடம் இருந்து ரெம்டெசிவர் மருந்துகளை ₹7 ஆயிரம் கொடுத்து வாங்கி தேவைப்படும் நோயாளிகளுக்கு ₹20 ஆயிரத்துக்கு விற்பனை செய்தது தெரியவந்தது. இதுகுறித்து திருவண்ணாமலை குடிமை பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில், நேற்றிரவு 9 மணியளவில் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் கம்பவுண்டர் விக்னேஷை குடிமை பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் கைது செய்தனர்.

அவரிடம் விசாரணை நடத்திக் கொண்டிருக்கும்போது விக்னேஷ் திடீரென மயங்கி விழுந்தார். இதையடுத்து, அவர் அதே மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும், கைதான விக்னேஷ் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சப்ளை செய்யப்படும் ரெம்டெசிவர் மருந்தை திருடி சென்னை டாக்டருக்கு விற்பனை செய்தாரா அல்லது மருத்துவமனைக்கு மருந்துகளை சப்ளை செய்யும் விநியோகஸ்தர்களுக்கு இடைத்தரகராக செயல்பட்டாரா என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொரோனா நோயாளிகளுக்கு அளிக்க வேண்டிய மருந்தை பதுக்கி விற்பனை செய்த விவகாரத்தில் அரசு மருத்துவமனை கம்பவுண்டர் கைது செய்யப்பட்டது திருவண்ணாமலையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 4.5 டன் அரிசி பறிமுதல் அரசு பஸ் கண்டக்டர் கைது



முகமது ரபீக்



பக்கிபுல்லா



ரபீக்

**பொள்ளாச்சி, ஏப். 30–** கோவை மாவட்டம், ஆனைமலை அருகே, கேரளாவுக்கு கடத்த முயன்ற, 4.5 டன் ரேஷன் அரிசியை, போலீசார் பறிமுதல் செய்து, மூன்று பேரை கைது செய்தனர்.

கோவை மாவட்டம், ஆனைமலையில் இருந்து, கேரளாவுக்கு ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக, போலீசாருக்கு தகவல் கிடைத்தது. நேற்று அதிகாலை, 2:30 மணிக்கு, போலீசார் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

அங்கு, மொபட்கள் மற்றும் வேனில், ரேஷன் அரிசி ஏற்றிய மூன்று பேரை பிடித்து விசாரித்தனர். அவர்கள், அதே பகுதியைச் சேர்ந்த பெயின்டர் ரபீக், 39, இறைச்சிக் கடை பணியாளர் முகமது ரபீக், 29, மற்றும் அரசு பஸ் கண்டக்டர் பக்கிபுல்லா, 44, என்பது தெரிய வந்தது.

மேலும் அவர்கள், 100 மூட்டைகளில், 4.5 டன் ரேஷன் அரிசி கடத்தியது தெரிந்தது. வாகனங்களை பறிமுதல் செய்த போலீசார், அவர்களை கைது செய்து, உணவுப் பொருட்கள் கடத்தல் தடுப்பு பிரிவு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

போலீசார் கூறுகையில், 'கைது செய்யப்பட்ட மூவரும், பொதுமக்களிடம் ரேஷன் அரிசியை குறைந்த விலையில் வாங்கி, கேரளாவுக்கு கடத்திச் சென்று, விற்பனை செய்ய திட்டமிட்டிருந்தனர்' என்றனர்.

## 'சஸ்பெண்ட்' அதிகாரி புதிய பதவியில் நியமனம்

சென்னை, ஏப். 30-

புதிதாக கட்டப்பட்ட தடுப்பணை உடைந்த விவகாரத்தில், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்ட பொதுப்பணித்துறை அதிகாரிக்கு, புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், தளவானூர்; கடலூர் மாவட்டம், எனதிரிமங்கலம் இடையே, 25 கோடி ரூபாய் மதிப்பில், தென்பெண்ணையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டது. இந்த தடுப்பணை, 2020 செப்டம்பரில் திறக்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழையில், தடுப்பணைக்கு நீர் வரத்து துவங்கியது.

இந்தாண்டு ஜனவரியில் பெய்த கன மழையால், தடுப்பணையின் ஒருபகுதி திடீரென உடைந்து விழுந்தது. சட்டசபை தேர்தல் நேரத்தில், இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பணியை கண்காணிக்காமல் அலட்சியமாக இருந்ததாக, சென்னை மண்டல நீர்வளத்துறை தலைமை பொறியாளர் அசோகன், கண்காணிப்பு பொறியாளர் சுரேஷ், செயற்பொறியாளர் ஜவஹர், உதவி பொறியாளர் சுமதி உள்ளிட்டோர், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டனர்.

இவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. தலைமை பொறியாளர் அசோகன் தரப்பில், எழுத்து பூர்வமான விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், சஸ்பெண்ட் செய்யப்பட்ட தலைமை பொறியாளர் அசோகனுக்கு தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற்று, புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

தலைமை செயலகத்தில் உள்ள, பொதுப்பணித்துறை அலுவலக சிறப்பு செயலராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியில் இருந்த ரவிந்திரபாபு, சென்னை மண்டல நீர்வளத்துறை தலைமை பொறியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுப்பணித்துறை செயலர் மணிவாசன், இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

in the fight against Covid-19. meters worth ₹55 lakh.

## Remdesivir scam busted, 6 held, 205 vials confiscated

TIMES NEWS NETWORK

**Chennai:** In a major bust exposing black market sale, a team of city police seized more than 205 vials of remdesivir smuggled from Bangladesh and arrested a six-member gang in connection on Thursday.

The accused were identified as S Vishnu Kumar, Shanmugam, his brother Ganesan, Praveen Kumar, B Bhuvaneswar, all natives of TN and R Nishit Bandari of Rajasthan.

A special police team based on a tip that a person was delivering smuggled remdesivir based on a WhatsApp order to the city, laid a trap and arrested S Vishnu Kumar at Kandigai bus stop and seized seven vials. When the team posed as potential buyers, the handler sought ₹26,000 for a vial and ₹1.6 lakh for six vials.

Vishnu told the police that Shanmugam from Kovilpatti had sent him ten vials. In a raid in Kovilpatti, Shanmugam and his brother Ganesan were arrested and 42 vials were seized from them. During interrogation, Shanmugam revealed Praveen Kumar from Tirunelveli had sent him the vials and four vials were seized from Praveen. The Tirunelveli police on interrogation found that Praveen Kumar had got the supply from Maduravoyal, after which Bhuvaneshwar arrested. As many as 145 vials were seized from Bhuvaneshwar.

On further inquiry, they found that R Nishit Bandari gave Bhuvaneshwar the products. Police seized seven vials from Bandari. Nishit Bandari had received the vials from another pharma company in Hyderabad who had imported the vials from Bangladesh. The six, whose involvement has come to light so far, have been arrested.

---


**குறிப்பு: தவிர்க்க முடியாத காரணங்களால் தலைவர் மடல் பிரசுரிக்க முடியவில்லை. அடுத்த இதழில் தொடரும்**

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

நேர்மை நெறி- ஜுன்-'2021

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச் செயலாளர்: ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 12 June 2021
Due to corona published online)

**யாதும் ஊரே! யாவரும் கேளிர்**

***பெறுநர்***

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர் இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!